ET/SSS/2022(2023)/OL/51/T/Q/S-3

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | අ. පො. ස. සාමාන්‍ය පෙළ | 2022 (2023)

# Student Seminar Series

## மாணவர் கருத்தரங்கு தொடர்

Practice Paper | முன்னோடி வினாப்பத்திரம்

# Drama & Theatre

# நாடகமும் அரங்கியலும்



**Question Paper - I, II** | **வினாப்பத்திரம் - I, II (மொழிமூலம்–தமிழ்)**

Nenasa
The National e-learning Portal for The General Education

தொலைக்கல்வி மேம்பாட்டு பிரிவு | கலைப்பிரிவு

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 51 | T | I, II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர்- 2022 (2023)
G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)

නාට්‍ය හා රංගකලාව I, II
நாடகமும் அரங்கியலும் I, II
Drama & Theatre I, II

පැය තුනයි.
மூன்று மணித்தியாலம்
Three Hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## நாடகமும் அரங்கியலும் I

கவனிக்க

- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. ‘நாடகம் போலச்செய்தலை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றது’எனக் கூறியவர்
   1) அரிஸ்டோட்டில் 3) குரோசோ
   2) தொம்சன் 4) பேனாட்ஷா

2. நடிப்பின் போது உள்ளத்தினைத் தளர்வாக வைத்திருப்பதற்கு உதவும் பயிற்சி
   1) சுவாசப் பயிற்சி 3) தியானப் பயிற்சி
   2) மூச்சுப் பயிற்சி 4) தளர்வுப் பயிற்சி

3. நாடக எழுத்துருவை நாடக ஆற்றுகையாகப் படைப்பாக்கம் செய்பவர்
   1) நாடகாசிரியர் 3) முகாமையாளர்
   2) நெறியாளர் 4) தயாரிப்பாளர்

4. அரசனின் புத்தாடை, சங்கிலி ஆகிய நாடக எழுத்துருக்களை எழுதியோர் முறையே:
   1) மாவை நித்தியானந்தன், க.கணபதிப்பிள்ளை
   2) ம.சண்முகலிங்கம், க.கணபதிப்பிள்ளை
   3) மாவை நித்தியானந்தன், ம.சண்முகலிங்கம்
   4) க.கணபதிப்பிள்ளை, மாவை நித்தியானந்தன்

5. பாத்திரத்தின் பௌதிகப் பண்பினை இனங்காண்பதற்கு உதவுபவை
   1) நடத்தை, பழக்கவழக்கங்கள் 3) வேட உடை, ஒப்பனை
   2) தொழில், சமயம் 4) அந்தஸ்து, பாத்திர மனநிலை

6. நாடக எழுத்துருக்களின் பிரதான கூறுகளில் ஒன்றாக அமைவது
   1) மேடைப்பொருள் 3) காட்சி விதானிப்பு
   2) அரங்கவெளி 4) மோதுகை

7. படச்சட்ட அரங்கின் தாயகம் எது?
   1) இத்தாலி
   2) இந்தியா
   3) யப்பான்
   4) கிரேக்கம்

8. கட்புல செவிப்புலக் கலைகளின் தொகுதி
   1) இசை, ஓவியம்
   2) நாடகம், வில்லுப்பாட்டு
   3) ஓவியம், வானொலி நாடகம்
   4) இசை, சிற்பம்

9. வெற்றி தோல்வியின்றி அனைவரும் பங்குகொள்ளக்கூடிய அரங்க விளையாட்டு அல்லாதது
   1) பஸ்
   2) பழக்கலவை
   3) ஆடும் வீடும்
   4) சங்கு வெத்திலை

10. உடலின் தசைநார்களை அழுத்துவதன் மூலம் குரல் பிறப்பிக்கப்படும் இடங்களின் எண்ணிக்கை
    1) 6 2) 3 3) 4 4) 5

11. கண்ணகி வழக்குரை என்ற இலக்கியத்துடன் தொடர்புடைய கூத்து வடிவம்
    1) பறைமேளக் கூத்து
    2) கோவலன் கூத்து
    3) காமன் கூத்து
    4) வசந்தன் கூத்து

12. வேட உடையின் தன்மை, மூலப்பொருள், பருமன் என்பவற்றை உள்ளடக்கியது
    1) இழைமானம்
    2) செறிவு
    3) வடிவம்
    4) இணைப்பு

13. கூத்தின் வடிவத்துக்குள் சமகால முக்கியத்துவமுடைய கருப்பொருளை இணைத்து மேற்கொண்ளப்பட்ட நாடகங்களுள் ஒன்று
    1) வாலிவதை
    2) கர்ணன் போர்
    3) நொண்டி நாடகம்
    4) கந்தன் கருணை

14. எழுத்துரு ஒன்றை ஆற்றுகைக்காக வியாக்கியானம் செய்யும் போது முக்கியத்துவம் குறைந்த ஒன்றாகக் கருதக்கூடியது
    1) கதை, கருவைத் தெரிந்து கொள்வது
    2) பாத்திரங்களை அறிந்துகொள்வது
    3) மூலக்கதையின் மாறுபாட்டைத் தெரிந்து கொள்வது
    4) சூழமைவுகளை விளங்கிக் கொள்வது

15. பரப்பொளி பற்றிய தவறான கூற்று
    1) குறிப்பிட்ட இடத்தில் அடர்த்தியான ஒளிக்கற்றைகள் மூலம் வெளிச்சத்தை வழங்குவது
    2) நிரந்தரமான அகல்கோண ஒளியைத் தருவது
    3) மேடையின் முழுமைக்குமாக ஒளிக்கற்றைகளைப் பாய்ச்சுவது
    4) பல பாத்திரங்களை ஒரு சம்பவத்தில் பார்ப்பதற்கு உதவுவது

16. நடிகர் ஒருவரைப் பாத்திரம் ஒன்றிற்காகத் தெரிவு செய்யும், மூடிய தெரிவு முறை என்பது
    1) ஒரு பாத்திரத்தின் ஊடாக இன்னொரு பாத்திரத்தைத் தெரிவு செய்தல்
    1) பலர் முன்னிலையில் ஒருவரைத் தெரிவு செய்தல்
    2) ஒருவரைத் தனியே அழைத்து தெரிவுசெய்தல்
    3) சுழற்சியான முறையில் தெரிவு செய்தல்

17. நாடக ஆற்றுகைக்காகத் திரை திறக்கப்படும் போது அரங்கில் மூன்று குடும்பங்கள் புலப்படும் நாடகம் எது?
    1) உயிர்த்த மனிதர் கூத்து
    2) ஆரொடு நோகேன்
    3) புதியதொரு வீடு
    4) மண்சுமந்த மேனியர்

18. நாடக எழுத்துரு ஒன்று முழுமைபெறும் சந்தர்ப்பமாகக் கூறக்கூடியது
    1) ஆற்றுகையின் போது
    2) ஒத்திகையின் போது
    3) வாசிப்பின் போது
    4) பயிற்சியின் போது

19. 'போகாத வழி மீதில் ஆர் போயினார்கள்..'எனத் தொடங்கும் புதியதொருவீடு நாடகப் பாடல் எவ்வகையான உணர்வு நிலையைப் புலப்படுத்துகின்றது
    1) வீரம்
    2) அற்புதம்
    3) சோகம்
    4) சந்தோசம்

20. கதை காணப்படாத போதிலும் பாத்திரங்களுக்கேற்ப வேறுபட்ட தாளங்களைக் கொண்டு நிகழ்த்தப்படும் கூத்து
    1) பறைமேளக்கூத்து
    2) வசந்தன் கூத்து
    3) மகிடிக்கூத்து
    4) காமன் கூத்து

21. ஆரொடு நோகேன் நாடகத்தில் கைலாயத்தில் நடந்த கதையினை வெளிப்படுத்துவோர்
    1) தந்தையர்கள்
    2) பெற்றோர்
    3) பிள்ளைகள்
    4) பாடகர் குழு

22. மீனவக் கிராமத்தின் கடலோரக் கதை கூறும் நாடகம்
    1) கோடை
    2) புதியதொரு வீடு
    3) முற்றிற்று
    4) பொய்க்கால்

23. A – நாய் கடித்துப் போடும்
    B – நட தம்பி முன்னாலை
    மேல்வரும் உரையாடல்களுக்குரிய பாத்திரங்கள் A,B முறையே
    1) மன்னவன், மாயன்
    2) மன்னவன், மாசிலன்
    3) மாயன், மாசிலன்
    4) மாசிலன், மன்னவன்

24. இசை நாடகத் துறையில் இயமன் பாத்திரமேற்று நடித்துப் புகழ்பெற்ற நடிகர்
    1) செல்வரத்தினம்
    2) சரவணமுத்து
    3) பொன்னாலைக் கிருஷ்ணன்
    4) மார்க்கண்டு

25. இந்தியா, மலேசியா போன்ற நாடுகளுக்குச் சென்று இசை நாடகங்களை நடித்துப் புகழ் பெற்றவர்
    1) மார்க்கண்டு
    2) செல்வரத்தினம்
    3) எம்.வி.கிருஷ்ணாழ்வார்
    4) சரவணமுத்து

26. சத்தியவான் சாவித்திரி, இராம நாடகம் என்பவற்றைக் குறிக்கும் அரங்க வடிவங்கள் முறையே
    1) இசைநாடகம், கூத்து
    2) கூத்து, இசைநாடகம்
    3) நவீன நாடகம், இசைசாடகம்
    4) இசை நாடகம், நவீன நாடகம்

27. வாசகப்பா எனும் ஆற்றுகை வடிவம் சிறப்பாக எங்கே நிகழ்த்தப்படுகிறது?
    1) யாழ்ப்பாண 2) மன்னார் 3) மலையகம் 4) வவுனியா

28. பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய சடங்குகள் முறையே

A – விவிலிப் பின்னணியைக் கதைப்பொருளாகக் கொண்டது.

B – திரெளபதி அம்மன் சடங்குடன் தொடர்புடையது

C – ஆலய வடக்கு வீதியை அரங்காகக் கொண்டு நிகழ்த்தப்படுவது

1) சூரன்போர், வனவாசம், பாஸ்கா
2) பாஸ்கா, குளுத்தி, றட்டயகும
3) பாஸ்கா, வனவாசம், சூரன்போர்
4) வனவாசம், வேட்டைத்திருவிழா, பாஸ்கா

29. கடபேரி, மத்தளம், தாளம், உடுக்கு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படும் சிங்கள பாரம்பரிய ஆற்றுகை வடிவம்
1) நூர்த்தி
2) நாடகம
3) கோலம்
4) சொக்கரி

30. மக்கன்ரையரிடம் பயிற்சி பெற்று, இன்றும் நாடகச் செயற்பாட்டாளராகத் திகழ்பவர்
1) க. பாலேந்திரா
2) அ. தாசீசியஸ்
3) மாவை நித்தியானந்தன்
4) சி. மௌனகுரு

31. பின்வருவனவற்றுள் வருடந்தோறும் பேரரங்காகப் பாஸ்காவை நிகழ்த்தும் நிறுவனம்
1) திருமறைக் கலாமன்றம்
2) அரங்க ஆய்வுகூடம்
3) அரங்கச் செயற்பாட்டுக் குழு
4) செயல்திறன் அரங்க இயக்கம்

32. பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களால் "ஈழத்து தமிழ் நவீன நாடகத் தலைமுறை ஒன்றின் தாய்" என வர்ணிக்கப்பட்டவர்
1) நா.சுந்தரலிங்கம்
2) குழந்தை ம. சண்முகலிங்கம்
3) பேராசிரியர் சி. மௌனகுரு
4) கலாநிதி க. சிதம்பரநாதன்

33. நாடக ஆற்றுகையில் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதில் பெரிதும் பங்கெடுப்பவர்
1) நாடகாசிரியர்
2) பார்ப்போர்
3) தயாரிப்பாளர்
4) நெறியாளர்

34. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் இரு நாடகத் தொகுதியில் உள்ளடங்குபவை
1) பொருளோ பொருள், தவறான எண்ணம்
2) உடையார் மிடுக்கு, முருகன் திருகுதாளம்
3) பொருளோ பொருள், கண்ணன் கூத்து
4) தவறான எண்ணம், நாட்டவன் நகர வாழ்க்கை

35. பாண்டவர்களும் கிளவுஸ் முனிவரும் என்ற கூத்துருவ நாடகத்தை எழுதியவர்
1) சி.மௌனகுரு
2) ஜோண்சன் ராஜ்குமார்
3) அ.தாசீசியஸ்
4) பொன்.கணேசமூர்த்தி

36. படத்தில் காணப்படும் இசைக்கருவியின் பெயர் என்ன?



1) ஹார்மோனியம் 2) கீபோட்
2) சுருதிப்பெட்டி 4)பியானோ

37. அருகிலுள்ள படத்தில் காட்டப்படுள்ளதும், கூத்துக்கள் ஆற்றுகை செய்யப்படுவதுமான அரங்கவெளி யாது?
    1) படச்சட்ட அரங்கு
    2) வட்டக்களரி
    3) கரளிய
    4) களத்துமேடு



38. ‘மனிதர்கள் உயிர்க்க வேண்டும்’ எனும் பாடல் வரிகளை எழுதியவரும் படத்தில் காட்டப்பட்டுள்ளவருமான கவிஞர்
    1) முருகையன்
    2) அம்பி
    3) உருத்திரமூர்த்தி
    4) சிவசிதம்பரம்



39. படத்தில் காணப்படும் நாடகக் காட்சி எந்த வகைக்குள் அடங்கும்
    1) வலராற்று நாடகம்
    2) சமய நாடகம்
    3) சமூக நாடகம்
    4) சிறுவர் நாடகம்



40. படத்தில் காட்டப்பட்டுள்ள, இந்தியாவின் கேரளாவில் ஆடப்படும் ஆட்டம்
    1) மோகினி ஆட்டம்
    2) கதகளி
    3) குச்சுப்பிடி
    4) கதக்




(40x 1= 40 புள்ளிகள்)

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
*கல்வி அமைச்சு*
**Ministry of Education, Sri Lanka**

| 51 | T | I, II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர் - 2022 (2023)
**G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)**

| | |
|---|---|
| නාට්‍ය හා රංගකලාව | I, II |
| **நாடகமும் அரங்கியலும்** | **I, II** |
| **Drama & Theatre** | **I, II** |

## நாடகமும் அரங்கியலும் II

- **முதலாம் வினா** கட்டாயமானது.
- **முதலாம் வினாவுக்கும், ஏனையவற்றுள் நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடையெழுதுக

**1. கீழ்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

i) தமிழர்களின் பாரம்பரிய நாடக வடிவம் எது? (01 புள்ளி)
ii) றட்டயகும ஆற்றுகை நிகழ்த்தப்படும் அரங்கவெளி எது? (01 புள்ளி)
iii) ‘‘எங்கள் மண்ணின் ஒவ்வொரு புல்லையும் ஒவ்வொரு பூவையும் …’’ பாடல் இடம்பெற்ற நாடகம் எது? (01 புள்ளி)
iv) சமஸ்கிருத் அரங்கில் பார்ப்போர் பெற்றுக்கொள்ளும் அழகியல் அனுபவம் எவ்வாறு அழைக்கப்படும்? (01 புள்ளி)
v) இலக்கு விளக்கு/ புள்ளிக் குவிய விளக்கு என அழைக்கப்படும் ஒளி வகை யாது? (01 புள்ளி)
vi) கூத்தில் சட்டம் கொடுத்தல் என்றால் என்ன? (01 புள்ளி)
vii) இசை நாடகத் துறையில் பெண்களை மட்டும் தனது நாடகக் குழுவில் இணைத்துச் செயற்பட்ட ஆளுமை யார்? (01 புள்ளி)
viii) வாள் மாற்றும் நிகழ்வு நடைபெறும் சடங்கு எது? (01 புள்ளி)
ix) இலங்கை அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் ஸ்தாபகர்கள் யாவர்? (02 புள்ளிகள்)
x) பாஸ்காவிற்கும் உடக்குப்பாஸ் இற்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

2.

i) ஆற்றுகைக் கலைகள் மூன்று தருக? (03 புள்ளிகள்)
ii) ஆற்றுகைக் கலையின் பண்புகள் மூன்று தருக? (03 புள்ளிகள்)
iii) நாடகக் கலைக்கும் இலக்கியக் கலைக்கும் இடையிலான வேறுபாடுகளைத் தருக? (06 புள்ளிகள்)

3.

i) சூழமைவொன்றைச் சித்திரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற நடிப்பு நுட்பங்கள் மூன்று தருக? (03 புள்ளிகள்)

ii) நாடக ஆற்றுகையில் குரற் பயிற்சியின் முக்கியத்துவத்தைத் தருக. (04 புள்ளிகள்)

iii) அரங்கப் பயிற்சிகள் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய வாழ்க்கைக்குத் தேவையான திறன்களைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

4.

i) புதியதொரு வீடு நாடகத்தின் மோதுகை யாது? (03 புள்ளிகள்)

ii) இம் மோதுகைக்கு ஊடாக முனைப்புறுத்தப்படும் பாத்திரங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

iii) நீங்கள் குறிப்பிட்ட பாத்திரங்கள் ஒவ்வொன்றினதும் பாத்திரப் பண்புகள் இவ்விரண்டைக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

5.

i) முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் ஆடப்படும் பிரதான கூத்து வடிவங்கள் எவை? (03 புள்ளிகள்)

ii) மரபுவழி ஆற்றுகைகளில் அண்ணாவியாரின் பங்களிப்புக்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

iii) வட்டக்களரியில் ஆற்றுகைக்கும் பார்வையாளருக்குமிடையிலான தொடர்பு நிலை பற்றிய கருத்தினை முன்வைக்குக. (05 புள்ளிகள்)

6. நவீன தமிழ் நாடக மரபின் பின்வரும் ஆளுமையினர் பற்றிய குறிப்புக்களை விவரிக்குக.

i) கலையரசு க. சொர்ணலிங்கம் (04 புள்ளிகள்)

ii) குழந்தை ம. சண்முகலிங்கம் (04 புள்ளிகள்)

iii) மஹாகவி து. உருத்திரமூர்த்தி (04 புள்ளிகள்)

7.

i) நாடக எழுத்துரு என்றால் என்ன? (02 புள்ளிகள்)

ii) விற்பனை முகவர், வாடிக்கையாளர், காவலாளி ஆகிய பாத்திரங்களை மையமாகக் கொண்டு ஐந்து நிமிடத்திற்கான நாடக எழுத்துரு ஒன்றை எழுதுக. (10 புள்ளிகள்)

*****